பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**15 07 2026 WEDNESDAY 6.30 PM**

மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) மொபைல் போனுக்கான உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2) இங்கிலாந்து உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் முதலமைச்சர் திரு விஜய் தலைமையில் இன்று சென்னையில் நடைபெற்றது.

4) தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு சாய்குமாருக்கு ஆறுமாத காலம் பணி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

5) 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியா 2 தங்கம், 6 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

-- இனி விரிவான செய்திகள் —

<<<<<<<>>>>>

மொபைல் போனுக்கான உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், 62 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக கூறினார்.

செமிகான் இரண்டாம் கட்டத் திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 500 கோடி ரூபாய் செலவில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

செமி கண்டெக்டர் வடிவமைப்பு மற்றும் உற்பத்திக்கு உரிய கட்டமைப்பை ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

யூரியா முதலீட்டிற்கான தேசிய கொள்கைக்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

இங்கிலாந்து உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் செயல்பாட்டிற்கு வந்துள்ளது வர்த்தகம், முதலீடு மற்றும் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், குறிப்பாக இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஜவுளித்துறையும், சிறு-குறு தொழில்துறையும் பெரிய அளவில் பயனடையும் என்று தெரிவித்துள்ளார்.

சமூக பாதுகாப்பிற்கான ஒப்பந்தமும் செயல்பாட்டிற்கு வந்துள்ளது நமது இளையோருக்கு பயனளிக்கும் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் இந்த ஒப்பந்தம் பயனளிக்கும் என்று டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இதற்கிடையே, இந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்று மூத்த பத்திரிகையாளர் வெங்கடேஷ் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — வெங்கடேஷ் - 43 Sec. )***

<<<<<<<>>>>>

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் முதலமைச்சர் திரு விஜய் தலைமையில் இன்று சென்னையில் நடைபெற்றது.

மாநில அமைச்சர்கள் திரு ஆதவ் அர்ஜூனா, திரு மரியவில்சன் மற்றும் உயரதிகாரிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

விளையாட்டுத்துறை சார்பில் பட்ஜெட்டில் இடம்பெற வேண்டிய அறிவிப்புகள் குறித்து இதில் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>

மருத்துவக் கல்வியில் தமிழகம் முன்னிலையில் உள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு அருண்ராஜ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அரசு மருத்துவக்கல்லூரிகளில் கூடுதலாக 150 இடங்களை தமிழகம் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, நாமக்கல், திருப்பூர், திருவள்ளூர் ஆகிய மூன்று அரசு மருத்துவக்கல்லூரிகளுக்கு தலா 50 இளங்கலை மருத்துவ இடங்கள் கூடுதலாக கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மாநிலம் முழுவதும் உள்ள 36 அரசு மருத்துவக்கல்லூரிகளில் இளங்கலை மருத்துவப் படிப்புக்கான இடங்கள் 5 ஆயிரத்து 200-ஆக அதிகரித்துள்ளதாகவும் திரு அருண்ராஜ் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு சாய்குமாருக்கு ஆறுமாத காலம் பணி நீட்டிப்பு வழங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இதுதொடர்பாக பெறப்பட்ட தமிழக அரசின் கோரிக்கையை பரிசீலித்து இந்த ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாக பணியாளர் நலத்துறை கூறியுள்ளது.

இதன்படி, செப்டம்பர் மாதம் ஒன்றாம் தேதி தொடங்கி, அடுத்த ஆண்டு பிப்ரவரி மாத இறுதிவரை திரு சாய்குமாருக்கு பணி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

அரசு பள்ளி நிர்வாகத்தில் தவெக அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசு பள்ளிகளில் ஆயுத கலாச்சாரம் பரவுவதாக குறை கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, சிவகங்கை மற்றும் திருச்சி மாவட்டங்களில் உள்ள அரசு பள்ளிகளில் நடைபெற்ற வன்முறை சம்பவங்களையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அறநெறிகளை போதிக்க வேண்டிய பள்ளிகளில், ஆயுதங்கள் புழங்குவது கடும் கண்டனத்திற்குரியது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு ராஜ்மோகனின் நிர்வாகத் தோல்விக்கு எடுத்துக்காட்டாக இது உள்ளதாகவும் திரு நயினார் நாகேந்திரன் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

கட்சி நிதி என்ற பெயரில் தவெக நிர்வாகி பணம் வசூலித்துள்ளதாக திமுக குற்றம் சாட்டியுள்ளது.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அக்கட்சி, இதுதொடர்பான காணொலி ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

ஊழல் அற்ற நிர்வாகம் என்று அறிவித்த தவெக-வின் வேஷம் இதன்மூலம் கலைந்துள்ளதாகவும் திமுக அதில் குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையே, இப்பிரச்சினையில் தொடர்புடைய தவெக நிர்வாகி திரு வீராசாமி, அக்கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

விவசாயிகள் நலனுக்கு எதிராக தவெக அரசு செயல்படுவதாக அஇஅதிமுக கூறியுள்ளது.

இதுதொடர்பாக, அக்கட்சி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், டெல்டா மண்டலத்தில் 12 மணல் குவாரிகளை திறக்க அரசு முடிவு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

இது விவசாயிகளுக்கு பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அஇஅதிமுக கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>

உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தின் பலன்களை ஓய்வு பெற்றோருக்கு வழங்கிட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் திரு வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 2003-ஆம் ஆண்டு முதல் பணியில் சேர்ந்து, 2025-ஆம் ஆண்டு வரை ஓய்வுபெற்ற அனைவருக்கும் இடைக்கால ஓய்வூதியம் 10 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்தவும் தவெக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு வீரபாண்டியன் அந்த அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

மதுரை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து ஆட்சியர் திரு நிஷாந்த் கிருஷ்ணா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

----------------

திருப்பத்தூர் மாவட்டம் கந்திலியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், **65** லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு ரவிகுமார் பயனாளிகளுக்கு வழங்கினார்.

------------

தேனி மாவட்டத்தில் ஈர நில கண்காணிப்புக் குழுவினருக்கான பயிலரங்கம் ஆட்சியர் திரு வைத்தியநாதன் தலைமையில் இன்று நடைபெற்றது.

--------------

சேலம் அரசு மருத்துவமனை வளாகத்தில் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் இன்று ஆய்வு மேற்கொண்டு, தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் கவர்களில் வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருட்களை பறிமுதல் செய்தனர்.

-----------------

நாகை மாவட்டம் வேதாரண்யத்தில் உப்பு உற்பத்தி தீவிரமடைந்துள்ளது.

-------------------

மயிலாடுதுறை மாவட்டத்தில் மக்கள் தொகை விழிப்புணர்வு தின பேரணி இன்று நடைபெற்றது.

-------------------

கடலூர் மாவட்டம் விருதாச்சலத்தில் தலைக்கவசம் அணிவதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

<<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

**19** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியா **2** தங்கம், **6** வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

ஜகார்தாவில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் **51** கிலோ எடைப்பிரிவில் சந்திரிகா புஜாரியும், **57** கிலோ எடைப் பிரிவில் **Prachi-**யும் தங்கப்பதக்கம் வென்றனர்.

**48** கிலோ எடைப்பிரிவில் **Gunjan-**னும், **54** கிலோ எடைப்பிரிவில் **Joyshree Devi Chirom-**ம், **60** கிலோ எடைப்பிரிவில் **Chahat-**ம், **75** கிலோ எடைப்பிரிவில் **Anshika-**வும், **80** கிலோ எடைப்பிரிவில் **Megha**

**Sheokhand**-வும், **80**-க்கும் கூடுதலான எடைப்பிரிவில் **Prachi Tokas**-ம் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

இப்போட்டியின் **23** வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் **Nisha** தங்கப்பதக்கத்தையும், **Nikita Chand, Kajal, Muskan** மற்றும் **Priyanka** வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

--------------

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் சுப்மன் கில் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

---------

**17** வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**Rohini Devba, Diksha, Sandhya Bishnoi** உள்ளிட்டோர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி, வரும் **27**-ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் **2**-ஆம் தேதிவரை **Azerbaijan**-னின், **Baku**-வில் நடைபெறவுள்ளது.

**<<<<<<END>>>>>**